ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கில௵ சித்திரை௴ பகுதி ௪.

Vol 6. *April & May 1929.* No. 4.

அர்ச்சாவதார வைபவம். *

ஸ்ரீய: பதியாயும் அருள் முதலிய குணங்கட்குக் கடலாயும் ஸர்வஸ்வாமியாயுமிருக்கிற ஸர்வேசுவரன் பிரளயதசையில் கைகால் முதலிய அவயவங்களையிழந்து உரைகல்லில் உரைக்கப்பெற்ற தங்கப்பொடி மெழுகிலொட்டியதுபோல போகமோக்ஷங்களற்று பிரகிருதியில் லயித்துக்கிடக்கிற ஆத்மவர்க்கங்களை உஜ்ஜீப்பிக்கத்திருவுள்ளம்பற்றித் தன்னைவணங்கி வழிபட்டு வாழ்த்துதற்குரிய கைகால் முதலிய அவயவங்களோடு கூடிய சரீரங்களைக்கொடுத்தான் அதன்மேலும் உண்மையையறிதற்குச் சாதனமாயிருக்கின்ற சாஸ்திரங்களை வியாசர் மநு ப்ரஹ்மா முதலானவர்களால் வெளியிட்டும் கார்யங்களில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்தியுண்டாவதற்கு அந்தர்யாமியாய்நின்றும் ஆராதனவிஷயஸித்திக்காக ராமகிருஷ்ணத்யவதாரங்களையும் அர்ச்சாவிக்ரஹத்தையும் அங்கீகரித்தான். இங்ஙனம் அங்கீகரித்துள்ள தன்னை ஸத்வாதி குணங்களுடைய மாந்தர்கள்

---

* இந்த அர்ச்சாவதார வைபவம் ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாந் கோம்டம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியால் வடமொழியில் அருளிச்செய்யப்பட்டது. ஈண்டு இது சோன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமியால் தமிழில்மொழி பெயர்க்கப்பெற்றது.

தம்மிச்சைக்கேற்றவாறு கர்மஜ்ஞான பக்திகளென்கிற சாதனபேதங்களால் ஆராதிக்கின்றார்கள். இங்ஙனம் ஆராதிக்கின்றவர்க்கு விரும்பிய பலனைக்கொடுத்தும், தெய்வம் பரகெதி முதலியன உண்டென்கிற ஆஸ்திக்யத்தை அடியோடகற்றிச் சரீரமே ஆத்மாவென்று நிச்சயித்துச் சுகதுக்கங்களில் பரவசமுற்றிருப்பவராகிய தமோகுணமுடையார் செய்த பாபங்கட்குத்தகுதியான சிக்ஷைகளைச் செய்து அவர்களைச் சுத்தராக்கியும் இங்ஙனம் லீலாரஸம் (விளையாட்டின்பம்) அநுபவித்துக்கொண்டெழுந்தருளியிரா நின்றான்.

ரஜஸ்தமோர்குணமுடைய மாந்தர்சிலர்க்கு ஆஸ்திக்யம் தலையெடுத்துப் பரலோகபலத்தில் விருப்பமுடையவராய் அப்பலத்தைப் பெறுதற்கு அவர்கள் அன்னியதெய்வங்களை ஆராதித்து அற்பமான பலங்களைப்பெற்றுத் திரிகின்றனர். சில உத்தமாதிகாரிகள் எம்பெருமான் அன்னியதெய்வங்கட்கும் அந்தர்யாமியாய் எழுந்தருளியிருந்து அவர்கட்கும் பலன்களைக்கொடுக்கின்றான் என்ற முறையையறிந்து அவனுக்கே உரியதாயும் மேன்மேலும் சுலபகுணபூர்த்தியையுடையதாயுமிருக்கிற அந்தர்யாமி விக்ரஹத்திலும் ராமகிருஷ்ணாத்யவதாரங்களிலும் அர்ச்சாவிக்ரஹத்திலும் பற்றுடையவர்களாய் ஆராதித்துச் சம்சாரத்தைக் கடந்து செல்கின்றார்கள்.

இந்த உத்தமாதிகாரிகள் கையாண்ட மார்க்கத்தைப் பிர்ம்மஸமாஜ ஆரிய ஸமாஜச்சார்பினராகிய சில நவீனர்கள் தூஷிக்க முன்வந்துள்ளார்கள். இவர்கள் அநாதியாயுள்ள பாபவாஸனையாலே பீடிக்கப்பட்டு உண்மைநிலையையும் அதற்குத்தகுதியான பிரயோஜனத்தையும் உபாயத்தையு மாராயமாட்டாமல் தமது நாஸ்திக்யத்தை மறைத்துக்கொண்டு வேதார்த்தத்தைத் தெரிவிக்கின்ற ஸ்மிருதிகளைச்செய்த மஹருஷிகளைத் தம்மிலும் அறிவிற்சிறியவர்களாகப் பாராட்டி அவர்களியற்றிய ஸ்மிருதிகள் ப்ரமாணமாகமாட்டாவென்றும், வேதத்திலும் சிலபாகங்கள் மாத்திரமே ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கனவென்றும் தமக்குவேண்டியவாறுரைத்து விதண்டாவாதஞ் செய்கின்றனர்.

இஃதல்லாமலும் ஆத்மாக்களை உய்வித்தற்காக உகந்தருளியதும் சுலபாதி குணங்கட்கு எல்லை நிலமானதும் கண்ணுற்கண்டு களித்தற்குரியதும் அறிவிற்சிறந்த பெரியாரோடு அறிவற்ற சிறியாரோடு வாசியற உய்விக்கும் நிலையுடையதாகையாலே எம்பெருமான் உகப்பிற்கு விஷயமாயுள்ளதுமான அர்ச்சாவிக்ரஹத்தைச் சிசுபாலாதிகள் விபவத்தில் (கண்ணனை) தூஷித்த முறையை எடுத்துக்கொண்டு சிறிதும் லஜ்ஜையில்லாமல் தூஷிக்கின்றார்கள். ஸ்மிருதி கர்த்தாக்களுடைய உரைகளெல்லாம் அடியோடு ப்ரமாணங்களாகமாட்டாவென்று தள்ளிவிட்டுத் தம்முரையெல்லாம் ப்ரமாணங்களாமென்று சொல்லுகிற இவர்களது மனவன்மையை என்னென்பேம். இவர்கள் இங்ஙனம் கூறுவதெல்லாம் உண்மையாகமாட்டாவென்று ஆராய்ந்தறியு மாற்றலில்லாத சாமான்ய ஜனங்களின் மனத்தைத் தமதுகெட்ட உபதேசங்களால் கலக்கிக் கொண்டுவருகிறார்கள். அந்தோ! பரிதாபம். காலக்கொடுமையை எங்ஙனமெடுத்துரைப்பது?

இனி இந்த அர்ச்சாராதனம் கூடாதென்கிற இந்த மதவாதிகளை நோக்கிச் சிலவினாக்களை வினவுகின்றோம். அவை வருமாறு.

அர்ச்சாராதனம் எவரேனும் ஒரு பகுதியினர்க்கு மாத்திரம் கூடாதா? அல்லது ஒருவர்க்கும் கூடாதா? இங்கு ஈசுவரனை அங்கிகரித்தவனுக்குக் கூடாதென்பதா? அல்லது ஈசுவரனையங்கீகரியாதவனுக்குக் கூடாதென்பதா? என்பது முதல்வினாவின் விளக்கப் பொருளாம். ஈசுவரனை அங்கீகரித்தவனுக்குக் கூடாதென்றாலோ ஈசுவரனை அங்கீகரித்தவர்கள் மோக்ஷத்தில் இச்சையுடைய முமுக்ஷுவும் சம்சாரியுமென்கிற இருபகுதியினராவர். இவர்களுள் முமுக்ஷுவுக்கு அர்ச்சாராதனங்கூடாதா? ஸம்ஸாரிக்குக் கூடாதா? என்ற வினாக்கள் நிகழும். இந்த மூன்று வினாக்களும் அர்ச்சாராதனங்கூடாதென்கிற விஷயத்தில் அதிகாரிகளைப்பற்றி எழுந்த விகற்பங்களாம். இனி இங்ஙனம் கூடாதென்று சொல்லுதற்குரிய காரணங்களை நிரூபித்துரைக்குமிடத்தில் தோன்றுகின்ற விகற்பங்களையும் ஈண்டுவிளக்குவாம். அவை.

* ஒருவருக்கும் அர்ச்சாராதனம் கூடாதென்று சொல்லும்போது (1) அநுபபந்நத்வம் காரணமென்று அபிப்பிராயமா? அல்லது (2) அநிஷ்டபலத்வம் காரணமா? அல்லது. (3) உயர்ந்தோர் ஒழுக்கமில்லாமை காரணமா? என்பன. இந்த மூன்று ஹேது வினாக்களுள் முதல்வினா இரண்டு வகையாகவும், இரண்டாவது வினா ஆறுவகையாகவும், மூன்றாவது வினா நான்குவகையாகவும், பொருள் விகற்பமுறும். அவற்றுள் முதல்வினாவாகிய அநுபபந்நத்வம் என்பதற்கு அயோக்யத்வம் என்று பொருள். இங்கு அயோக்யத்வம் என்ற பொது மொழி க்ருத்யந்வயா யோக்யத்வமா? (ஆராதனம் செய்யத்தக்கதன்றா?) என்றும், அர்ச்சாவிக்ரஹத்திற்கு ஆராதனாந்வய யோக்யத்வமில்லையா? (ஆராதனமென்பது செய்யக்கூடியதாயிருந்தாலும் ஆராதனத்திற்கு அர்ச்சாவிக்ரஹம் விஷயமாக மாட்டாதா?) என்று இரண்டு வகையான் விகற்பிக்கப்படும். இரண்டாவது வினாவாகிய அநிஷ்டபலத்வம் என்பது இஷ்டபலாபாவரூபமா? (தனக்கு இஷ்டமாயுள்ள பலமில்லையா?) என்றும், அநிஷ்டமாயுள்ள பலத்திற்குக்காரணமா? என்றும் இரண்டுவகையால் விகற்பிக்கப்படும். இவ்விரண்டு வகையுள் இஷ்டபலாபாவம் என்பது இஹலோகத்தில் இஷ்டபலமில்லையா? அல்லது பரலோகத்தில் இஷ்டபலமில்லையா? என்று இருவகையான் வினாவப்பெறும். அநிஷ்டபலத்திற்குக் காரணம் என்பதும் இஹலோக அநிஷ்டபலத்திற்குக் காரணமா? பரலோக அநிஷ்டபலத்திற்குக் காரணமா? என இரண்டு வகையான் வினாவப்பெறும். ஆக அநிஷ்ட பலத்வம் என்பது ஆறு வகையாற் பொருள் விகற்ப மெய்தியவாறறிக.*

உயர்ந்தோரொழுக்கமில்லாமை காரணமா? என்பதும் முன் காலத்தில் உயர்ந்தோர் ஒழுக்கமில்லாமை காரணமா? இப்பொழுது உயர்ந்தோர் ஒழுக்கமில்லாமை காரணமா? இவ்விடத்தில் உயர்ந்

* இங்கு அர்ச்சாராதனங் கூடாதென்பதற்கு மூன்று ஹேதுவினாக்கள் தோன்றின. இவை அர்ச்சாராதனத்திற்கு யோக்யத்வமில்லாமையாலே செய்யக்கூடாது. விரும்பிய பயன்கிடைக்காமையால் செய்யலாகாது. உயர்ந்தோர்களுடைய ஒழுக்கமில்லாததினால் செய்யவொண்ணாது என்கிற மதவாதிகளின் கருத்தையுட்கொண்டெழுந்தன வென்றறியத்தக்கது.

தோரொழுக்கமில்லாமை காரணமா? த்வீபாந்தரத்தில் உயர்ந்தோர் ஒழுக்கமில்லாமை காரணமா? என்று நான்கு வகையான் வினவப் பெறும். ஆக ஆராதனம் கூடாதென்கிற விஷயத்தில் அதிகாரிகளைப்பற்றி எழுந்தவினுக்கள் மூன்றும், காரணம்பற்றி எழுந்த வினுக்கள் பன்னிரண்டும் ஆக வினுக்கள் பதினைந்தாமென்று அறியத்தக்கது. இவ்வினுக்கட்குச் சமாதனம் உரைக்கப்பெறும்.

ஆராதனம் செய்யத்தக்கதில்லையென்று சொல்வது பொருந்தாது. ஆராதனமாவது உத்தேசியமான வ்யக்தி விசேஷத்திற்கு முகோல்லாஸமுண்டாமாறு செய்யத்தக்க வியாபாரமாம். அங்ஙனமாம்போது ஆராதனம் செய்யத்தக்கதில்லை யென்பது எங்ஙனம் பொருந்தும்? அப்படியானுல் உலகத்தில் ஒரு வ்யவஹாரமும் நிலையாதன்றே.

முகோல்லாஸமுண்டாதற்குரிய வியாபாரம் என்பது ஆராதனைக்கு லக்ஷணமானுல் முகமலர்ச்சி பிம்பவடிவாகிய விக்ரஹத்தில் எவ்வாறுண்டாகும்? உண்டாகாதாதலால் விக்ரஹம் ஆராதிக்கத் தக்கதில்லையென்பது விளங்கவில்லையா? என்றுரைப்பதும் பொருந்தாது. ஒரு பிம்பத்தைச் சொல்லக்கூடிய அர்ச்சாசப்தமானது அதை அபிமானித்துக் கொண்டிருக்கிற ஈசுவரனையுங் கூட்டியே குறிப்பிடும் ஆக்ருத்யதிகரண நியாயத்தாலே தேவதத்தன் முதலான சரீரங்களைக் குறிப்பிடுகின்ற சொற்கள் அவ்வச்சரீரத்தை அபிமானித்துக்கொண்டிருக்கிற ஆத்மாக்களைச் சுட்டியுணர்த்துவதைக் காண்கின்றோம். மேலும் எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கும் எம்பெருமானுக்கு எல்லாத்தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லாக் கார்யங்களிலும் ஸமமாக வர்த்திக்கின்ற முறையாலன்றோ விபுத்வம் உள்ளதென்று கொள்கிறோம். அப்போது அர்ச்சாவிக்ரஹத்திலும் ஸர்வேசுவரனுடைய வ்யாப்தியிருப்பதால் அந்தச் சப்தம் அவனளவும் சென்றல்லது நில்லாது.

ஆனுல் ஈசுவரன் இங்ஙனம் அந்தர்யாமியாக நிறைந்திருப்பதில் குறையில்லையாகில் ஆராதனம் செய்கின்றவர்களாகிய பக்தர்களுக்கு எல்லாவிடங்களிலும் ப்ரதிபத்திஸமமாக உண்டாகவேண்டிய முறையிருக்க அர்ச்சாவிக்ரஹத்தில் மாத்திரம் விசேஷப்ரதிபத்தியும்

மற்றவிடங்களில் அவ்வாறின்றியுமிருக்கக் காரணம் யாதெனின்; அன்பருக்கு அதிசயிக்கத்தக்க அன்புமேலிட்டு அதுகாரணமாக ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் ஸர்வேந்திரியங்களைக்கொண்டும் அநுபவகைங்கர்யங்களைச் செய்யவேண்டுமென்று மநோரதித்து ஏதேனுமொரு த்ரவியத்தை அவனுக்குத் திருமேனியாகக் கற்பித்து அதிலே ஸாந்நித்யத்தைச் செய்யவேண்டுமென்று அவர்கள் பிரார்த்திக்க, அவனும் பரம கிருபையையுடையனுகையாலே அதற்கிணங்கி அவர்கள் உகந்த உருவத்தில் விசேஷ ஸாந்நித்யத்தைச் செய்கிறுனுகையாலே அர்ச்சாவிக்ரஹத்தை விசேஷித்து ஆதரிக்கக் குறையில்லையன்றே!

இன்னும் இதற்குச் சில திருஷ்டாந்தங்கள் ஈண்டுரைக்கப்பெறுகின்றன. எல்லாத் தேசங்களையும் தன்னதாகக்கொண்ட சக்ரவர்த்தி ஜனங்களுடைய வேண்டுகோளிற்கிணங்கி ஒவ்வொரு ஸ்தலவிசேஷங்களில் தங்குவதுபோலவும், வைதிககர்மங்களில் தர்ப்பையிலும் பிராஹ்மணர்களிடத்திலும் ஆவாஹநஞ் செய்யப்பட்டு பித்ருதேவதைகளும் பிரஹ்மாவும் ஸாந்நித்யம் செய்வதுபோலவும், இந்திராதிதேவர்கள் மந்த்ரங்களால் அழைக்கப்பட்டு யக்ஞசாலைகளில் வருவதுபோலவும் அடியார்களால் பிரார்த்திக்கப்பட்டு அர்ச்சாபிம்பத்தில் எமபெருமான் ஸாந்நித்யத்தைச் செய்யக் குறையாதுளது?

மேலும் உலகத்தில் கைகால்முதலிய அவயவங்களோடு கூடிய ராஜாக்களை ஆராதிக்க அதனுல் அவன் மகிழ்ச்சியுறுகிற விஷயத்தைக் கண்கூடாகக்கண்ட வாஸநா விசேஷத்தாலே அப்படிப்பட்ட சரீரத்தைக் கற்பித்து அதிலே ஸாந்நித்யத்தைப் பிரார்த்திப்பதே வழக்கமாயிருக்கிறது. எம்பெருமான் எங்கும் ஸாந்நித்யம் செய்கிற முறையை மேற்கொண்டு பசு முதலிய சரீரங்களைக் கற்பித்து அதிலே ஸாந்நித்யத்தைப் பிரார்த்திப்பதில்லை. இது நிற்க,

ஒரு புருஷனை ஆராதித்தால் அதனுல் அவனுக்கு முகமலர்ச்சியுண்டாக ப்ரத்யக்ஷமாகக் காணுவதுபோல ஸர்வேசுவரனை ஆராதிப்பதால் அவனுக்கு முகமலர்ச்சியுண்டாக ப்ரத்யக்ஷமாகக் காண்கின்றேமில்லை யாதலால் அர்ச்சாவிக்ரஹத்திற்கு ஆராதனுந்

வயக்கூடாதென்று கொள்ளலாகாது. உலகத்தில் சைத்ரனைப்போல ஒரு பிம்பத்தைச்செய்து அந்தப் பிம்பத்திற்குப் பூஜைசெய்தாலும் அல்லது அவமான ஹேதுவான கார்யத்தைச் செய்தாலும் அவற்றைபறிந்த உண்மையான சைத்திரனுக்குப் பிரீதி துக்கங்கள் உண்டாகப் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம். அதுபோல அர்ச்சா விக்ரஹத்திற்குச்செய்கிற ஆராதனப் பிரகாரத்தால் § பரவ்யூஹாதி பின்னமான எம்பெருமானுடைய சரீரத்தில் மூன்றுகாலங்களிலும் உண்டாகக் குறையில்லையென்று அநுமிக்கலாயிருக்கும். (ஊகிக்கலாயிருக்கும்) ஈசுவரனும் ஒருபுருஷ விசேஷனாகையாலே அவனுக்கும் சரீரமுண்டெனக் கொள்ளத்தட்டில்லை. ஆனால் புருஷசரீரம்போலே ஈசுவர சரீரமும் அவயவமுடையதாக விருப்பதுகொண்டு கார்யமாகக் கொள்ளவேண்டுமென்று சொல்லவொண்ணாது.

ஈசுவர சரீரமொழிந்த மற்றவையெல்லாம் அவயவமுடையனவென்றுகொள்ளவேண்டுமாதலால் அக்குற்றம்வராது. ஈசுவரசரீரமொழிந்தமற்றவையெல்லாம் அவயவமுடையனவென்று கொள்ளாதபோது † அநவஸ்தாதோஷமுண்டாம். இப்படியல்லாமல் ஈசுவர சரீரத்தைக் கார்யமாகக்கொண்டாலும் அது கார்யமாகாது; நித்யமாமென்று கொள்ளத்தக்கது.

அவயவமுடையதைக் கார்யமாகக்கொள்ளாமல் நித்யமாகக் கொள்வது யுக்திக்குப் பொருந்தவில்லையாதலால் அவயவத்தோடு கூடியதை நித்யமாகக்கொள்ளவும் வேண்டா; ஈசுவரனுக்குச்சரீரம் ஒப்புக்கொள்ளவும் வேண்டாவென்று ஒரு பக்ஷமுரைப்பதுண்டு.

---

§ பரவ்யூஹாதி பின்னமான எம்பெருமான்—அர்ச்சாவதார எம்பெருமான்.

† ஈசுவரன் கார்யங்கட்கெல்லாம் காரணமாகவிருக்கிறனென்பது முடிந்த பொருளாயிருக்க அவனுடைய சரீரமும் கார்யமென்றால் அந்தச்சரீரத்தை உண்டாக்குவதற்குமுன்பு வேறொரு சரீரத்துடனிருந்தானெனல் வேண்டும். அந்த வேறோர் சரீரத்தையுண்டாக்குவதற்குமுன்னர் மற்றோர் சரீரத்துடனிருந்தானெனல்வேண்டும். அந்த மற்றோர் சரீரத்தையுண்டாக்குதற்கு முன்பு பின்னையோர் சரீரத்துடனிருந்தானெனல்வேண்டும். இங்ஙனமுரைப்பது வரம்பின்றிச் செல்லும் இதைத்தான் அநவஸ்தாதோஷம் என்பர்கள். [அநவஸ்தா—நிலையில்லாமை]

இந்தப்பக்ஷத்தைக்கொண்டு சிலர் வாதிக்கின்றார்கள். எவ்வாறெனின்; சரீரமில்லாதவனுக்குக் கர்த்ருத்வம் (கர்த்தாவாயிருக்குந்தன்மை) இல்லையாதலால் ஜகத்ஸ்ருஷ்டித்வம் ஈசுவரனுக்கு ஒப்புக்கொள்ளக் கூடாதென்பதாம். அசரீரனாயிருக்கும் ஈசுவரனுக்கு ஜகத்ஸ்ருஷ்டித்வம் கூடாதென்றால் ஜகத்து பிரத்யக்ஷத்திற்கு விஷயமாகாதிருத்தல் வேண்டும். ஜகத்து பிரத்யக்ஷத்திற்கு விஷயமாயிருத்தலால் ஈசுவரனுக்கு ஜகத்ஸ்ருஷ்டித்வம் அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளாவிட்டால் ¶ பாததோஷமுண்டாம்.

இங்ஙனம் கொள்கின்ற இப்பக்ஷத்தை மேற்கொண்டு ஈசுவரனுக்குச் சரீரம் ஒப்புக்கொள்ளாவிடினும் ஜகத்ஸ்ருஷ்டித்வம் § அர்த்தாபத்தி ப்ரமாணத்தாலே உண்டென்பது பெறப்படும்.

முன்பு அநவஸ்தாதோஷ பரிகாரத்திற்காக ஈசுவர சரீரமொழிந்த மற்றவையெல்லாம் அவயவத்துடன் கூடியவையென்று சொல்லப்பட்டது. இவ்வாறன்றி ஈசுவரன் தன்னுடைய சரீரத்தையுண்டுபண்ணும்போது அசரீரியாயும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்குமிடத்து சரீரத்துடனிருந்தும் ஸ்ருஷ்டிக்கிறானென்றுகொண்டால் அநவஸ்தாதோஷமுண்டாகாது.

அநவஸ்தாதோஷ பரிகாரநிமித்தமாக ஈசுவரன் தன் சரீரத்தை அசரீரியாய் நின்று ஸ்ருஷ்டிக்கிறானென்றாலும் அந்தச் சரீரம் அநித்யம் என்பது ஸித்திக்கின்றதன்றோ! (பிறப்பிறப்பென்பன ஆத்மா, சரீரத்துடன் கூடுவதும் பிரிவதுமாதலால்) அங்ஙனமாம்போது சரீர வியோகத்தாலுண்டாகின்ற துக்கமும் ஈசுவரனுக்குண்டென்று கொள்ளவேண்டுமல்லவா? என்று சொல்லலாகாது. அவன் கர்மவசப்பட்டவனில்லையென்பது துணிபாதலால். ஜீவனிடத்தில் துக்கித்வமிருக்கின்ற ஹேதுவைக்கொண்டு அவனுக்குக்

¶ பாதம்—மறுத்தல்.

§ அர்த்தாபத்தியாவது பகலுண்ணான் சாத்தன் பருத்திருக்கிறானென்பது. சரீரம் பருப்பது போஜனத்தினால்; போஜனமில்லாதபோது சரீரம் பருப்பதென்பது கூடாது; என்ற உணர்ச்சியால் சாத்தனுக்குப் பகல்போஜனமில்லாவிடினும் இராத்திரிபோஜனம் உண்டென்பது பெறப்படும்.

கர்மவசியத்வம் உண்டென்று ஊகிப்பதுபோல ஈசுவரனுக்குத் துக்கித்வம் உண்டென்பதற்கு யாண்டும் ப்ரமாணமில்லாமையாலே அவனுக்குக் கர்மவசியத்வ முண்டென்று ஊகிப்பதற்கு இடமில்லை.

இவ்வாறு ஒப்புக்கொள்வதானாலும் மற்றோர் வகையால் ஈசுவரனுக்குத் துக்கித்வமுண்டென்று கொள்வதற்கிடந்தருகிறது, எவ்வாறெனின்; புருஷத்வமுள்ள ஜீவனுக்குத் துக்கித்வமிருக்கக் காண்கின்றோம். இந்தப் புருஷத்வம் ஈசுவரனுக்கு முண்டன்றோ! அதனால் ஈசுவரனுக்குத் துக்கித்வமுண்டென்று ஊகிப்பதற்கு இடந்தருகிறதே என்பதாம். இப்படி யுரைப்பதும் பொருந்தாது. கடத்வரூப பொது தர்மம் கடப்பொதுமையிலும் ஒத்திருந்தாலும் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்ற நிறவேறுபாடுகள் கடங்களில் காணப்படுவதுபோல புருஷத்வரூப தர்மம் ஜீவனிடத்திலும், ஈசுவரனிடத்திலும் பொதுப்படவிருந்தாலும் ஜீவனிடத்தில் துக்கித்வமும் ஈசுவரனிடத்தின் அஃதின்மையு முண்டெனக் கொள்ளவேண்டும்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(60-ம் பக்கத்தொடர்ச்சி.)

எந்த மனிதனுக்கு இந்துதர்மத்தின் மர்மம் புலப்படவில்லையோ அம்மனிதன் அநந்த சக்திமானான ஈசுவரன் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக மாத்திரம் அவதாரம் செய்தானென்று நினைப்பான். அவதாரத்தின் உண்மை பகவத்கீதையில் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் ।
த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³ ॥

தர்ம ஸம்ரக்ஷணமென்றால் இரண்டொரு துஷ்டர்களை வதைத்தல் மாத்திரமா? தர்மம் எது? தர்மஸம்ரக்ஷணம் எவ்விதம்? நம்முடைய சரீர ஸம்பந்தமானதும் மனதின் சம்பந்தமானதுமான எவ்வித விருத்திக்கும் ஸ்பூர்த்தியும் சாரிதார்த்தியமுமே தர்மம். இந்த தர்மம் அநுசீலனத்தையே அபேக்ஷித்திருக்கிறது. அநுசீலனம் கர்மாவை அபேக்ஷிக்கிறது. ஆகையால் கர்மமே தர்மத்திற்குப் ப்ரதான உபாயம். இக்கர்மத்தையே ஸ்வதர்ம பாலனம் என்று சொல்லுதல் பொருந்தும். மனிதன் தன்னைக் காப்பாற்றுதல் முதலிய விருத்திகளின் வசப்பட்டவனாகத்தானே கர்மம் செய்ய முயலுகிறான். இதனால் தனக்கு மேன்மை சம்பாதித்தல் மிகவும் அரிது. உபதேசத்தினால் மாத்திரம் சரியான கர்மங்கள் செய்யவொண்ணாது. மனிதருக்கு ஓர் ஆதர்சம் அவசியம் வேண்டும். ஸம்பூர்ண தர்மங்கள் நிறைந்த ஸம்பூர்ண ஆதர்சம் ஈசுவரனைக் காட்டிலும் வேறெது உளது? ஆனால் நிராகாரனாகிய ஈசுவரன் நமக்கு ஆதர்சமாக எப்படியிருக்க முடியும்? அவர் அசரீரி சாரீரிக விருத்தியற்றவர். நாம் சரீரிகள். நமது சரீரவிருத்திகளே நமது தர்மங்களுக்கு முதன்மையான இடையூறுகள். அவர் அநந்தர்; நாம் அந்தமுள்ளவர்கள்.

நாம் அற்பர்கள். ஆகையால் ஈசுவரன் சரீரமெடுத்து நமக்குத் தரிசனமளித்தால் தான் அந்தவாதர்சத்தைப்பார்த்து நாம் உண்மையான தர்மங்களைக் கைக்கொள்ளக்கூடும். மேன்மையை அடையக்கூடும். இதுவே ஈசுவராவதாரத்தின் பயன். மனிதனுக்கு கர்மத்தின் ரஹஸ்யம் தெரியாது. எக்கர்மம் செய்தால் தர்மம் மேன்மை பெறுமோ அக்கர்மம் இன்னதென்று மனிதன் அறியான். ஈசுவரன் தானே அவதாரம் செய்தால் மனிதர்களுக்குப் புத்தி புகட்டல் கூடும். இதை யுத்தேசித்து ஈசுவரன் கருணை கூர்ந்து அவதாரம் செய்தாரென்பது ஏன் பொருந்தாது? பகவத்கீதையில் பகவானே இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

“𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌚𑌰 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ॥
𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ।
𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

யத்யதாசரதி ஶ்ரேஷ்ட²: தத்ததேவேதரோ ஜந:
ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத³நுவர்த்ததே ॥
நமே பார்தா²ஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந ।
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவச கர்மணி ॥
யதி³ஹ்யஹம் நவர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।
மமவர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த² ஸர்வஶ: ॥
உத்ஸீதே³யுரிமே லோகா: நகுர்யாம் கர்மசேத³ஹம் ।
ஸங்கரஸ்ய சகர்த்தாஸ்யா முபஹந்யாமிமா: ப்ரஜா:

கீதா. 7.

பொருள்:— புருஷன் ஆஸக்த்தியை விட்டு கர்மாநுஷ்டானம செய்தால் மோக்ஷ லாபத்தை அடைவான். ஆகையால் நீயும் ஆஸக்த்தியை விட்டு கர்மாநுஷ்டானம் செய். ஜநகர் முதலிய மகாத்மாக்கள் கர்மாநுஷ்டானத்தினலேயே ஸித்தி பெற்றூர்கள்.

சிரேஷ்டன் எதை யாசரிக்கிருனே இதரர்களும் அதையே ஆசரிக்கிறூர்கள். எதை யாதாரமாகக் கொள்ளுகிருனே அதையே மற்றவரும் ஆதாரமாகக் கொள்ளுகிறூர்கள். ஆதலால் நீயும் உலகத்தின் தர்ம ரக்ஷார்த்தமாக கர்மாநுஷ்டானம் செய். கவனித்துக் கொள். மூவுலகத்திலும் எனக்கொரு பேக்ஷையுமில்லை. நமக்கொரு கடமையும் இல்லை. ஆனுலும் நான் கர்மாநுஷ்டானம செய்து கொண்டிருக்கிறேன். நான் உதாசீனமாகக் கர்மாநுஷ்டானம் செய்யாதிருந்தால் சகல ஜனங்களும் என்னையே யனுசரித்து கர்மாநுஷ்டானஞ் செய்யாதிருப்பார்கள். நான் கர்மஞ் செய்யாவிட்டால் இவ்வெல்லா வுலகமும் உத்ஸந்நமாகி விடும். நானே வர்ண ஸங்கரத்திற்குக் காரணமாய்ப் பிரஜைகளின் அழிவுக்கும் காரணமாவேன்.

விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுளது.

மநுஷ்ய யஜ்ஞ ஶீலஸ்ய ஶீலாஶாஜகத: பதேத்। கர்த்தவ்ய நேகாநிவாணி யதநாதிஷ்ட மந்நதி ॥ மநமேவ ஜமத்வஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதிய: தஸ்யாபிவக்ஷ்யமாணே கோய மத்யமவி ஸ்தர: ॥ ததாபியே மநுஷ்யாணாம் யஜ்ஞ ஸதமந

[illegible] பொருள்.

ஜகத்பதியாயிருந்தும் அவர் சத்ருக்களைக் குறித்து அஸ்திர விக்ஷேபணஞ் செய்தார். இது அவர் மனுஷ்யாவதார மெடுத்ததால் மனுஷ்ய தர்மத்தை யனுசரித்து அவர் அவ்விதம் செய்தார். எவர் சங்கல்ப மாத்திரத்தினுல் ஜகத்தை சிருஷ்டிக்கவும் அழிக்கவும் வல்லரோ அவருக்கு சத்ருஜயம் செய்வதற்காக இவ்விதம் முயற்சி எதற்காக? மனுஷ்யதர்மத்தை யநுவர்த்தித்ததால் பலவான்களுடன் சந்தியும் பல ஈனர்களுடன் போர்புரிதலும் சாம, தான, பேத உபாயங்களை முன்னிட்டு தெண்டம் விதித்தலும் சிலவிடங்களில் புறங்காட்டுதலையும் நடித்துக் காட்டினுர். மனுஷ்ய தேகிகளின் செயல்களின் அநுசாரமாக ஜகத்பதியும் இச்சாமாத்திரத்தில் இவ்விதம் லீலை புரிந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் மனிதவுடல் பூண்டு அதிமாநுஷ சக்தியால் யாதொரு காரியமும் செய்யவில்லையென்று யாவருக்கும் மேற்கூறியவைகளால் புலப்படும். ஆதலால் கீழ் சொல்லப்படுகிற நியமனத்தின்படி விசாரம் செய்யப்புகுவாம்.

1. எவைகளைப் பிரக்ஷிப்தங்களென்று நிரூபிப்போமோ அவைகளை விலக்கி விடுவோம். 2. எவைகள் அதிப்பிரகிருதமாகவும் நம்பவொண்ணததாகவு மிருக்கின்றனவோ அவைகளையும் தள்ளிவிடுவோம். 3. எவைகள் வேறுவித ப்ரமாணங்களால் உண்மையல்லவென்று காணப்படுகின்றனவோ அவைகளையும் புறக்கணிப்போம். இவ்வித நியமங்கள் முன்பே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளை மறுபடியும் பத்திரிகா நேயர்களுக்கு நினைப்பூட்டினேம்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(5-ம் தொகுதியின் 199-ம் பக்கத்தொடர்ச்சி.)

(௩௨) யக்ஷ:- [illegible]
[illegible]

கோமோததே கிமாச்சர்யம் க:பந்தா: காசவார்த்திகா
வதமேசதுர: ப்ரச்நாந் ம்ருதாஜீவந்து பாந்தவா:

(இ-ள்.) எவன் மகிழ்கிருன்? ஆச்சர்யமெது? வழி யெது? உலக விருத்தாந்த மென்ன? என்னுடைய நான்கு வினக்களுக்கு விடையளிப்பாய். உன்னுடைய பந்துக்கள் உயிர்பெற்றெழுவார்கள்; எ-ம்.

தர்ம:- [illegible]
[illegible]

பஞ்சமேஹநி ஷஷ்டேவா சாகம் பசதி ஸ்வேக்ருஹே
அந்ருணீசா ப்ரவாஸீச ஸவாரிசரமோததே.

(இ-ள்) (119) பகற்பொழுதின் ஐந்து அல்லது ஆருவது முகூர்த்தத்திலாவது கீரையேனும் தன் வீட்டில் சமைத்ததையுண்டு தேசாந்தரஞ் செல்லாமலும் கடன் வாங்காமலும் எவனிருக்கின்ருனே அவனே சிறந்த மகிழ்ச்சியுடையவனுகிருன்; எ-ம்.

---

(௩௨) இனி, வேள்வி முதலிய நற்கருமங்கட்கும், உபாஸனைக்கும், ஞானத்திற்கும் மூலகாரணமாயிருப்பது வைராக்யமாமென்பதுரைக்கப்படுகிறது.

(119) ஆசையின் வாயிலகப்பட்டுப் பொருள் தேடுதற்குத் தேசாந்தரஞ் செல்லுதலும், அறுசுவை யுணவுப்பொருளையுண்டுகளிப்பதற்குக் கடன்வாங்குதலும் மாந்தர் பலருக்கும் இயல்பாயிருத்தலால் இங்ஙனம் பொருள் தேடுதற்கு அன்னியதேசஞ் செல்லாமலும் சுவையுணவுப் பொருளையுண்ணக்

𑌅𑌹𑌨𑍍𑌯𑌹𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍀𑌹 𑌯𑌮𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌶𑍇𑌷𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌕𑌿𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥

அஹந்யஹநி பூதாநி கச்சந்தீஹ யமாலயம்
சேஷா: ஸ்தாவரமிச்சந்தி கிமாச்சர்யமத: பரம்

(இ-ள்.) (120) நாடோறும் உயிர்கள் யமபுரத்திற்குச்சென்று கொண்டிருக்கின்றன. (இங்ஙனமிருக்கவும் சென்றவரொழிய செல்லாது) மிகுந்திருப்பவர்கள் (இதையறியாது) தாம் நிலைத்திருப்பதாக எண்ணுகிறார்கள். ஆகலால் இதனினும் ஆச்சர்யம் வேறியாதுளது? எ-ம்.

𑌤𑌰𑍍𑌕𑍋𑌽𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌃 𑌨𑍈𑌕𑍋 𑌋𑌷𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂, 𑌮𑌹𑌾𑌜𑌨𑍋 𑌯𑍇𑌨 𑌗𑌤𑌃 𑌸 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 ॥

தர்க்கோப்ரதிஷ்ட: ச்ருதயோ விபிந்நா: நைகோமுநிர்யஸ்ய மதம் ப்ரமாணம்
தர்மஸ்யதத்வம் நிஹிதம் குஹாயாம்; மஹாஜநோ யேந கத: ஸபந்தா:

(இ-ள்) (121) தர்க்கமோ நிலைபேறில்லாததாக இருக்கின்றது. தர்க்கித்துப்பொருள் காண்பதற்கு மூலமான வேதங்களோ ஒன்றற்

கடன் வாங்காமலுமிருத்தல் வைராக்யத்தின் கார்யமாகும். ஆதலால் வைராக்ய முடையவர்க்கே கிடைத்ததைக்கொண்டு ஜீவித்துப் பிறவிடங்கட்கு அலையா திருக்கின்ற நற்பேறு வித்திக்குமென்பது பெறப்படும்.

(120) இதனால் உலகிலுள்ள உயிர்கள் நாடோறும் மடிவதைக்கண்டு தனக்கும் அந்நிலையுண்டெனக்கொண்டு இதரவிஷயங்களில் பற்றற்றிருத்தலாகிய வைராக்ய ஸம்பத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்பது பெறப்படும்.

(121) ஒருவன் சாஸ்திரங்களை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்து அதன் பிறகு ஒருவழியைக் கடைப்படித் தொழுகுவதென்றால் அது அவனுக்குக் கிலேசத்தையும் புத்திக்குச் சாஞ்சல்யத்தையும் தருமே யல்லாது ஸ்திரமான உணர்வைத்தராது. வேதசாஸ்திரங்களில் சஞ்சரித்து அவற்றின் பொருள்

கொன்று மாறுபாடுடையனவாயிருக்கின்றன. எவருடைய கொள்கையை நாம் ப்ரமாணமாகக் கொள்ளவேண்டுமோ (அத்தகைய வேதத்திற்குப் பொருள்கண்ட) முனிவர்களோ பலராயிருக்கின்றனர். (ஆதலால்) தர்மத்தின் உண்மையானது குகையிலிடப்பட்டதுபோல் மறைபட்டிருக்கிறது. (ஆனதுபற்றி) பெரியோர்கள் எவ்வழிச்சென்றனரோ அத்வே வழியாம்; எ-ம்.

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌮𑌯𑍇 𑌕𑌟𑌾𑌹𑍇, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾
𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑍇𑌨𑍍𑌧𑌨𑍇𑌨।
𑌮𑌾𑌸𑌰𑍍𑌤𑍁𑌦𑌰𑍍𑌵𑍀𑌪𑌰𑌿𑌘𑌟𑍍𑌟𑌨𑍇𑌨, 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌲𑌃
𑌪𑌚𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌰𑍍𑌤𑌾॥

அஸ்மிந்மஹாமோஹமயே கடாஹே, ஸூர்யாக்நிநா ராத்ரி
திவேந்தநேந
மாஸர்துதர்வீ பரிகட்டநேந, பூதாநிகால: பசதீதிவார்த்தா.

(இ-ள்.) (122) நீடித்த மயக்கமே வடிவமான இவ்விஷய ஸாகரமாம் தாழியில் ஸூர்யனுகிய அக்னியையும் இராப்பகலாகிய விறகையும் ஸாதனமாகக்கொண்டு மாஸ ரிதுக்களாகிய தர்வியினுல் (கரண்டியினுல்) புரட்டிவிட்டுக் காலனுனவன் உயிர்களைக் கொல்கின்றுனென்பது உலகவதந்தியாம்; எ-ம்.

முடிவுகண்ட பெரியோர் சென்றவழியே ஸர்வ ஸம்மதமாயிருக்குமாதலால் அவ்வழியையே கடைப்பிடித்தொழுகுவது உண்மையுணர்வைப் பெறுதற்குச் சாதனமாயிருக்குமென்றறியத்தக்கது. "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚" என்பது ஈண்டறியத்தக்கது.

(122) இவ்விருத்தாந்தம் உலக முழுவதும் பரவியிருப்பதால் இவ்வுலகிற் காணப்படும் யாவும் நிலையற்றனவென்பதை வெகு ஸுலபமாய்த்தெரிந்து கொள்ளக்கூடும். இதனுல் இவ்விஷயங்களை ஒவ்வொருவரும் நன்கறிந்து வைராக்யத்தைப்பெற்றுப் பிறவிப்பயனைப் பெறவேண்டுமென்பதுணர்த்தலாயிற்று.

(௩௩) யக்ஷ:- 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌮𑍇𑌤𑍍𑌵𑌯𑌾 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾 𑌯𑌾𑌥𑌾𑌤𑌥𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂𑌤𑌪
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑍁 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌯𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑍀 𑌨𑌰𑌃

வ்பாக்யாதாமே த்வயாப்ரச்நா யாதாதத்யம் பரந்தப
புருஷந்து விதாநீம் வ்பாக்யாஹி யச்ச ஸர்வதநீநர:

(இ-ள்) பகைவரைச் சிக்ஷிப்பவனே! எனது வினாக்களெல்லாம் முன்பே உண்மையாக உரைக்கப்பட்டன. இனி, புருஷன் யார்? க்ருதக்ருத்யன் யார்? என்பதை உரைப்பாயாக; எ-ம்.

தர்ம:- 𑌦𑌿𑌵𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌿 𑌭𑍂𑌮𑌿𑌂𑌚 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌯𑌾𑌵𑌤𑍍𑌸 𑌶𑌬𑍍𑌦𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

திவம் ஸ்பிருசதி பூமிஞ்ச சப்த: புண்யோ கர்மண
யாவத்ஸசப்தோபவதி தாவத்புருஷ உச்யதே.

(இ-ள்.) (123) ஒருவன் செய்யும் நற்கர்மங்களினாலுண்டாகும் புகழானது எவ்வளவு காலம் ஸ்வர்க்கலோகத்தையும் பூமியையும் வ்யாபித்து நிற்கின்றதோ அதுவரையிலும் அவன் புருஷன் எனப் படுவான்; எ-ம்.

---

(௩௩) இனி, நற்கருமங்களைச் செய்தவன் இத்தகைய பயனைப்பெறுவானென்பதும், ஆத்மஞானத்தைப்பெற்றவன் இத்தகைய பயனைப்பெறுவானென்பதும் ஈண்டு உணர்த்தப்பெறுகின்றன.

(123) புருஷன் என்ற சொல் “𑌪𑍁𑌰𑌿 𑌶𑍇𑌤𑍇 𑌵𑌸𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃” (சரீரமாகிய பட்டினத்தில் வசிப்பவன்) என்ற வ்யுத்பத்தியினால் பிழைத்திருப்பவன் என்ற பொருளை யுணர்த்தும். அதனால் புருஷன் யார்? என்ற வினாவிற்குப் பிழைத்திருப்பவன் யார்? என்பது பொருளாம். பயனை விரும்பியோ அன்றி விரும்பாமலோ செய்கின்ற நற்கருமங்களாலுண்டாகும் ஒருவனது புகழ் நிற்குந்துணையும் அவன் வழங்கப்பட்டு வருகின்றானாதலால் புகழ் நிற்கும் வரையிலும் அவன் புருஷனெனப்படுவான் என்று சொல்லப்பட்டது. இதனால் அவனது புகழ் நிற்குந்துணையும் ஸ்வர்க்காதி சுகங்களை யனுபவித்து அஃதொழிந்தபின் இவ்வுலகில் தனது சஞ்சித

𑌤𑍁𑌲𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌾𑌗𑌤𑍇 𑌚𑍋𑌭𑍇 𑌸𑌮𑍌 𑌸𑌰𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃॥

துல்யே ப்ரியாப்ரியே யஸ்ய ஸுகதுக்கே ததைவச
அதீதாநாகதே சோபே ஸமௌ ஸர்வதர்சிநர:

(இ-ள்.) (124) எவனுக்கு இஷ்டாநிஷ்டங்களும், கழிவெதிர்வுகளும் ஸமமாக ஆகின்றனவோ அவனே க்ருதக்ருத்யனும்; எ-ம்.

முற்றுப்பெற்றது.

கர்மத்திற்கேற்ற சரீரத்தைப்பெற்று முன்பு செய்த போந்தகர்மத்தின் வாஸனைக்குத்தக்க வினைகளைச்செய்து படிப்படியாய் அவாவற்றவனுயிருப்பானுயின் வீடு பெறுவான். இன்றேல் பாசப்பிணிப்புற்றுப் பிறவிக்கடலுள் அழுந்துவானென்பது இதனுல் அறியத்தக்கது.

(124) இங்கு க்ருதக்ருத்யன் என்பதற்கு ப்ராஹ்மத்தை யறிந்தவன் என்று பொருள் கொள்ளத்தக்கது. ‘‘𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌯 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍’’ (எவன் ஆத்மாவை யறிகிருனே அவனே எல்லா உலகங்களையு மறிகிருன்; எல்லா இஷ்டங்களையு மடைகிருன்.) என்ற சுருதி வாக்கியத்திஞல் இங்கு இவ்வாறு பொருளுரைக்கப்பட்டது. எப்பொருளையறிந்தால் அறியவேண்டுவனவெல்லா மறிந்ததாகவும், அடையத்தகுந்தனவெல்லா மடைந்ததாகவுமாகுமோ அப்பொருளை (பரப்ரஹ்மத்தை) எவனொருவன் உணர்கின்ருனே அவனே க்ருதக்ருத்யனுமென்பதாம். இவன் இஷ்டாநிஷ்டங்களையும் ஸுகதுக்கங்களையும் ஸமமாகக் கருதுதல் இவனுக்கியல்பாகவமைந்ததோர் குணமாம். இதனுல் இத்தகைய குணத்தை முமுக்ஷுவான ஜீவன் பெறுதற்கு முயலவேண்டுமென்பதறிவுறுத்தலாயிற்று.

ஸ்ரீ:

தீர்க்க சிந்தையந்தீ.

சிந்தையந்தீ என்பவள் இடைக்குலமாதருள் ஒருத்தி. கண்ணபிரான் ப்ருந்தாவனத்தில் திருக்குழலூத அந்தச் செவிக்கினிய ஒலியைக்கேட்ட ஆய்ப்பெண்கள் பலரும் கண்ணபிரானிருக்குமிடம் நாடிச் செல்லாநின்றனர். அப்பொழுது இந்தச் சிந்தையந்தீ தன மாமனாரின் கட்டளையைமீறிச் செல்லுதற்காற்றாது கண்ணபிரானைத் தியானஞ்செய்து அவனிடத்திற் குடிகொண்டிருக்கிற நெஞ்சினாலுண்டாகிய குற்றமற்ற சுகத்தாலும், அவனையடையப் பெறாமையாலுண்டாகிய அளவற்ற துக்கத்தாலும் புண்ணிய பாபங்களழியப் பெற்றவளாய் அவன் விஷயமான சிந்தை இடையறாது செல்லாநிற்க; அவனைக் கிட்டப்பெறாமையால் வந்த துக்கத்தால் தரிக்கமாட்டாமல் மூச்சடங்குகையால் இவளுடைய தேகம் தன்னடையே விட்டொழிந்தது. இதுவே சிந்தையந்தியின் விருத்தாந்தமாம்.

இங்குத் தீர்க்க சிந்தையந்தீ என்றது நம்மாழ்வாரை. சிந்தையந்திக்குக் கண்ணபிரான் விஷயத்திலுண்டாகிய அத்யந்த பக்தியும், அவனைக் கிட்டப்பெறாமையாலுண்டாகிய துக்கமும் ஒருகாலத்தில் நிகழப்பெற்று முடிவுற்றாள். இவருக்கு ஈசுவரவிஷயத்திலுண்டாகிய பிரியாப்பிரியங்கள் முடிவடையாமற் சென்றுகொண்டிருந்தமையால் சிந்தையந்தியின் தன்மை மிக்கிருப்பதறியலாம்.

இவ்வாழ்வாருக்குப் பகவதநுபவ சுகம் அதிகரித்தபோது உலகிலுள்ள பொருள்களெல்லாம் தம்மைப்போல எம்பெருமானைப் பெற்று ஸுகிக்கின்றனவாகவும் அவனைவிட்டுப் பிரிவதாலுண்டாகிய துன்பமென்பதொன்றுண்டென்பது மறியாதிருப்பர். அவனைவிட்டுப் பிரிவதாலுண்டாகிய விசனம் மிக்கபோது உலகிலுள்ள வஸ்துக்களெல்லாம் எம்பெருமானைவிட்டுத் துக்கிக்கின்றனவாகக் கருதி அவனைக்கூடிச் சுகிப்பதுண்டென்பது மறியாது அவற்றிற்காகத் தாம் துன்புறுவர். இவருக்கு இக்களிப்புக்கவற்சிகள் முடி

வின்றிச் சென்றனவென்பதை இவரது திருவாய்மொழி கொண்டு தெளியலாம். அவை வருமாறு.—

“ஊருநாடுமுலகுந்தன்னைப்போலவனுடைய, பேருந்தார்களுமே பிறற்ற...” என்றதனால் ஆழ்வாருக்குப் பகவதநுபவசுக மதிகரித்த போது உலகிலுள்ளவர்களெல்லாம் எம்பெருமானுடைய திருநாம முதலியவற்றைச் சொன்னார்க்கென்று தம்மைப்போலக் கருதினாரென்பதறியலாம். “வாயுந்திரையுகளும்” என்ற திருவாய்மொழியில் நாரையையும், அன்றிலையும், கடலையும், வண்டையும், வானத்தையும், சந்திரனையும், இருளையும், கடற்கழியையும் நோக்கி “நீங்கள் என்னைப்போல எம்பெருமானைவிட்டுப் பிரிந்து நின்று துன்புற்று வாடுகின்றீர்களோ” என்று அருளிச்செய்ததினால் எம்பெருமானை விட்டுப் பிரிந்து துன்புற்று நின்ற நிலையில் உலகிலுள்ள பொருள்களெல்லாம் தம்மைப்போல அங்ஙனமே துன்புறுகின்றனவாகக் கருதினாரென்பதும் தெளிவாம்.

இன்னும் திருவாய்மொழியில் பலவிடங்களிலும் ஆழ்வாருக்கு எம்பெருமான் விஷயமாகக் களிப்புக்கவற்சிகள் முடிவு பேறின்றிச் சென்றன என்பது புலனாகிறது. காளை போன்றவனைக் காளை யென்பதுபோலவும், பாவை போன்றவளைப் பாவையென்பதுபோலவும் சிந்தையந்தீ போன்றவரைச் சிந்தையந்தீ யென்று சொல்லப்பட்டது. இது, உவமையாகு பெயராம்.

ஈசுவர விஷயத்தில் பிரியாப்பிரியங்கள் உண்டாயினவென்ற இவ்வளவுமாத்திரம் ஒற்றுமைபற்றி ஆழ்வாருக்குச் சிந்தையந்தியை உவமையாக உரைக்கப்பட்டது. சிந்தையந்திக்கு ஒருகாலத்திலே கண்ணன் விஷயத்தில் களிப்புக்கவற்சிகள் நிகழ்ந்தன. ஆழ்வாருக்கு ஈசுவரவிஷயத்தில் களிப்புக்கவற்சிகள் பலகாலம் நிகழ்ந்தனவாதலால் அவளைக்காட்டிலும் இவர் விலக்ஷணர் என்பதை விளக்கத் தீர்க்கம் என்ற அடைமொழியிட்டு வழங்கலாயிற்று. இதனால் ஆழ்வாருக்குச் சிந்தையந்தீ ஒருவாற்றான் ஒப்புமையும், ஒருவாற்றான் ஒவ்வாமையுடையவளாயிருப்பாளென்று கொள்ளத்தக்கது.

உலகிலுள்ளவர்கட்குப் பொருள், காமங்காரணமாக இன்ப துன்பங்களுண்டாகும். அதுபோலில்லாது ஆழ்வாருக்கு ஈசுவர விஷயமான தியானத்தால் அவனை நேரிற்கண்டநுபவிப்பதுபோன்ற மனத்தெளிவுண்டாம்போது ஸுகமும், அத்தகைய மனத்தெளி விற்கோர் கலக்கம நேர்ந்தபோது துக்கமுமுண்டாகும். இங்ஙனம் சுகதுக்கங்கள் இவருக்கு ஈசுவரவிஷயமாகவே நிகழ்ந்தனவாதலால் இவர் பக்திபாரவசியத்தால் சிறந்தவராய் விளங்கினர். இச்சிறப் புடைமைபற்றியே இவர் ஆழ்வார்களில் தலைவராயும், ப்ரபந்நஜன கூடஸ்தராயுந் திகழ்ந்தனர்.

நம்பிள்ளையருளிய ஈட்டின் மஹாப்ரவேசத்தில் "இவருக்குப் பிரியாப்பிரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேணவுண்டா யிருக்கையாலே இவருக்குச் சிந்தையந்திப்படி நித்யமாய்ச் செல் லுகையாலே இவரைத் தீர்க்கசிந்தையந்தி யென்றுயிற்று நம் முதலி கள் அருளிச்செய்வது" என்றுரைக்கப்பட்டுளது. இதனால் ஆழ்வா ருக்குத் தீர்க்கசிந்தையந்தி யென்ற குறியீடு பூர்வாசார்யர்களாலிடப் பட்டதென்றறியத்தக்கது.

ஸ்ரீ:

அழகியமணவாள தாசரென்ற திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் அருளிச்செய்த

* எதிராச ரந்தாதி.

பூமான் பிறந்து சிறந்தது வேலை புவிபடைத்த
கோமான் பிறந்து சிறந்தது நான்மறை கூடற்சங்கம்
நாமான் பிறந்து சிறந்தது பண்டெதி ராசனென்னுஞ்
சீமான் பிறந்து சரணு கதியுஞ் சிறந்ததுவே. (௧)

[பூமான்—சீதேவி. புவிபடைத்தகோமான்—பிரமன். கூடல்—மதுரை. நாமான்—சரஸ்வதி.]

சிறந்தது செல்வஞ் சிறவா ததுகலி சில்சமய
மறந்தது மாதவன் பேர்வாழ்த்த வைகுந்த மன்னுமுனி
திறந்தது வாசல் திறவா நரகந் தெரிந்த வையம்
பிறந்தது பூதூர்ப் பிறவா முனிவன் பிறந்தபின்னே. (௨)

[செல்வம்—வைஷ்ணவஸ்ரீ. கலி—பாவம். சமயம்—மதம். ஐயம்—சந்தேகம். பிறவாமுனிவன்—கருமவசத்தாற் பிறவாத எதிராசர்.]

பின்னே தொடரும் பிறவிப் பெரும்பிணி பேர்க்கும் வண்ணம்
இன்னே யிதற்கு மருந்தறிந் தேனிந்த மேதினியிற்
றன்னே ரொருவரோவ் வாவெதி ராசன் சரணமென்று
சொன்னே னறிந்திலே யோமன மேயிந்தத் துக்கம்விட்டே (௩)

[பேர்த்தல்—போக்குதல். இன்னே இப்பொழுதே. மேதினி—பூமி.]

விட்டது தீவினை மாண்டது கோவமெய்ஞ் ஞான நெஞ்சிற்
பட்டது வேறு பரவச்சஞ் தீர்ந்தது பாவமெல்லாங்

---

* இது, ஸ்ரீ. உ. வே. வித்வான். மு. ராகவையங்கார் ஸ்வாமிகளால் செந்தமிழில் வெளியிடப்பட்டிருப்பினும், இராமானுச நூற்றந்தாதிபோல வைஷ்ணவர்களுக்கு நித்யானுசந்தான யோக்யமாயிருத்தலால் திவாகரத்தின் மூலம் சிறு குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று.

கெட்டது வீடு ¶ தகுமென்று கேசவன் றாள் தலைமேல்
இட்டது வெங்களிராமா னுசனென் றிருப்பவர்க்கே. (௪)

[வேறுபரவச்சம்—திருமாலையன்றி வேறு பரதேவதையுண்டோ வென்ற பயம். வீடு—மோக்ஷம். தகுமென்று—தக்கதென்று. தாள்—திருவடி]

இருக்கின் பொருளு மறிவின் பொருளு மெழுத்தெட்டி னால்
உருக்கும் பொருளு முணர்வின் பொருளுமொரன் றாகவெல்லாஞ்
சுருக்கும் பொருளுந் துணிவின் பொருளுந் துணிந்தபின்பு
செருக்கும் பொருளு மெதிராச ராசன் றெரித்தனனே. (௫)

[இருக்கு—வேதங்கள். எழுத்தெட்டு—திருவஷ்டாக்ஷரம். அறிவின் பொருள்—பொதுவுணர்விற்கு விஷயமான பொருள். உணர்வின்பொருள்—விசேஷ உணர்விற்கு விஷயமானபொருள். தெரித்தனன்—உணர்த்தினன்.]

தெரியாத வாதியர் தேற்றம்விட் டேதிரு வெட்டெழுத்தின்
உரியா ரருள்பெற வேண்டுதி ரேடுடு வும்பிறையும்
பிரியா மதிட்பெரும் பூதூர் முனிசொன்ன பேச்சை நெஞ்சிற்
றரியா தவரறி யாரினி வேறில்லை சத்தியமே. (௬)

[வாதியர்—பரசமயிகள். தேற்றம்—துணிவு. (சித்தாந்தம்) திருவெட்டெழுத்தின் உரியார்—திருமந்திர ப்ரதிபாத்யனை திருமால். உடு—நக்ஷத்திரம். பேச்சு—உபதேசம்.]

சத்தியத் தின்பொருள் தத்துவத் தின்பொருள் தன்னிலுன் னும்
புத்தியத் தின்பொருள் புண்ணியத் தின்பொருள் பூசுரர்தம்
பத்தியத் தின்பொருள் பற்றறுக் கும்பொருள் பற்றறுத்தால்
முத்தியத் தின்பொருள் பூதூர் முனிவன் மொழிந்தனனே. (௭)

[பூசுரர்தம்பத்தியம்—அந்தணர்க்குரியவேதம். புத்தியம்—புத்தி. அம் சாரியை—முத்தியம் என்பதும் அது.]

மொழிக்கே கரும்பையுந் தேனையும் வைத்தந்த மொய்குழலார்
விழிக்கே யகப்பட் டுழலுகின் றீர்கள்மெய்ஞ் ஞானநெஞ்சிற்

¶ தரும்—என்றும் பாடமுண்டு.

சுழிக்கே கொழிக்கும் யமுனைத் துறைமுனி சொல்லச்சொன்ன
வழிக்கே நினையுங் கெடவெதி ரேவரும் வைகுந்தமே. (௮)

[மொய்குழலார்—நெருங்கியகூந்தலையுடைய மகளிர். நெஞ்சிற்சுழி—நெஞ்சாகிய சுழி. கொழித்தல்—தெள்ளுதல். (ஆராய்ந்து கொள்ளுதல்) நெஞ்சமாகிய சுழியின்கண் மெய்ஞ்ஞானத்தைக் கொழிக்கும் என்று கூட்டுக. "யமுனைத்துறை" (முனி) என்றதற்கேற்ப "சுழிக்கே கொழிக்கும்" என்ற நயம் கவனிக்கற்பாலது.]

வையகத் தேதன்னை வள்ளலென் றேத்தினும் வாய்திறவாக்
கையகத் தேநின்று கண்குளிர் வீர்கரு ணாகரனை
மெய்யகத் தேவைத்த பூதூர்முனிவன் விரைமலர்த்தாள்
பொய்யகத் தேநிற் கிலுமக லாள்மணப் பூமகளே. (௯)

[கை—கீழ்மகன். அகம்—இடம். கருணாகரன்—அருளுக் குறைவிடமான திருமால். மெய்யகம்—உண்மையான இருதயம். விரை—மணம். பூமகள்—ஸ்ரீதேவி.]

† சந்தார் புயத்தெங்க ளாழ்வார் தமக்குந் ததியருக்கும்
அந்தாதி பத்து மணவாள தாச னலற்றியதால்
நந்தாத குற்றமுண் டாகா. தவர்க்கொரு நாய்கங்கை நீர்
தன்றாபந் தீரக் குடித்தாலுந் தீர்த்தத்திற் றாழ்வில்லையே. (௰)

[சந்து—சந்தனம், அழகுமாம். ததியர்—நாதமுனிகள் தொடக்கமான ஆசாரியர்கள். தாபம்—விடாய்.]

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

† இச்செய்யுளால் இவர் ஆழ்வார்கள் ஒவ்வொருவர்க்கும், நாதமுனிகள் தொடங்கிப் பட்டர்வரையுள்ள ஆசார்யர்களுக்கும் இதுபோன்ற ஒவ்வோர் அந்தாதியருளிச்செய்துள்ளார் என்று வெளியாகிறது. அவையுங் கிடைக்குமேல் அனுசந்தானத்துக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். உடையவர் கொடுத்துதவுவாராக.

ஸ்ரீ:

நன்கொடை.

ஆன்றோர் பலராலும் புகழ்ந்து கொண்டாடப்பெற்ற இப்பாதகண்டத்தில் இப்பொழுது பல விபரீதத்துறைகளே .தலைசிறந்தோங்குகின்றனவென்பதை யாவருமறிவர். இங்ஙனமிருக்கின்ற இக்காலத்தில் உள்ளன்போடு கூடிய நம் ஸம்ப்ரதாயச் சார்பினரைக் காண்பதரிது. இப்பெரியாரைக் காணினும் ஸம்ப்ரதாயாபிவிர்த்தி தர்மத்திற்கு நன்கொடை செய்வாரைக் காணுதல் அரிதினுமரிது. இப்படி அருமைப்பட்டிருக்கிற இக்காலத்தில் கீழ்க்குறிப்பிடப்பெற்ற தார்மிகர்கள் நமது திவ்யகாரம் மேன்மேலும் விளக்கமுற்று நிலைபெறுதற்காக ஜீவித சந்தாதார்களாகச்சேர்ந்து உதவிபுரிந்துள்ளார்கள். இவர்களுள் சாதாரண சந்தாதார்களாயிருந்த (ஜல்லிபட்டியிலுள்ள) இருவர் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்துள்ளார்கள். இவர்கள் செய்த உதவி எழுமையும் மறக்கற்பாலதன்று. இவர்கள் இம்மையில் எல்லாச்சம்பத்தையும் நிறையப் பெற்று நீண்டகாலம் புகழுடன் வாழ்ந்து பின்னர் நித்யாநந்தமாகிய பெரும் பேற்றைப் பெற்றின்புறுமாறு ஸ்ரீய:பதியாகிய எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

வக்கீல் ஸ்ரீ. உ. வே. T. இராமாநுஜையங்கார்ஸ்வாமி (இராமநாதபுரம்)	ரூ 25
ஸ்ரீமான் A. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள் (ஆலந்தூர்)	ரூ 25
,, பத்மநாபராமாநுஜ தாஸரவர்கள் (சுண்டிவாக்கம்)	ரூ 25
,, G. வரதராஜுலு நாயுடவர்கள் (புரசைவாக்கம் சென்னை)	ரூ 25
,, இராஜகோபால ராமாநுஜதாஸரவர்கள் (ஜல்லிபட்டி)	ரூ 25
,, பச்சார். வெ. கிருஷ்ணசாமி நாயக்கரவர்கள் (ஜல்லிபட்டி)	ரூ 25
,, K. சுப்பராயலு செட்டியார் என்ற இராமாநுஜதாஸரவர்கள் (சேலம்)	ரூ 3